

TAF IAS ACADEMY
THINK YOU CAN...
AAMU PUBLICATION TENKASI
தமிழ்நாடு
வளர்ச்சி நிர்வாகம்
Based on New Syllabus
TNPSC
GROUP ,II,IIA,IV
FREE SHIPPING
10 % OFF
Discount
TAF
IAS ACADEMY
All Over Tamilnadu
60 Branches
15985+ Govt. Officers
ORDER NOW
https://www.tafiasacdemy.in/shop/
புத்தக தேவைக்கு :
COURIER & தபாலில் பெற
9566974903,8940077756

AAMU PUBLICATION TENKASI

# தமிழ்நாடு வளர்ச்சி நிர்வாகம்

Based on New Syllabus

# TNPSC
GROUP I,II,IIA,IV






## TAF IAS ACADEMY

All Over Tamilnadu - 60 Branches / 15985+ Govt. Officers


**J.ஆகாச மூர்த்தி** M.Com., LL.B.,
FOUNDER, TAF IAS ACADEMY

TAF BOOK's

# தமிழ்நாடு

# வளர்ச்சி நிர்வாகம்

## (புதிய பாடத்திட்டம்)




Coaching for :
UPSC - TNPSC
POLICE - SI
TET -TRB - SSC
BANKING
RAILWAY

புத்தக தேவைக்கு (கூரியர் & தபால்) பெற...
செல் : 95669 74903

16 ஆண்டுகளில் 15985+பேருக்கு அரசுப்பணி
தமிழகம் முழுவதும் 60 கிளைகள்

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

TAF IAS ACADEMY

tafiasacademyho@gmail.com www.tafiasacademy.in TAF IAS ACADEMY / TAF POLICE

திரு. J.ஆகாச மூர்த்தி M.Com.,LLB., நிறுவனர், TAF IAS ACADEMY

திரு. M.மாரியப்பன் M.Com., நிர்வாக இயக்குநர், TAF IAS ACADEMY

Head Office : TENKASI

9597587300 TAF IAS ACADEMY

## பதிப்புரிமை

ஆசிரியரின் எழுத்து மூலமான அனுமதியின்றி இப்புத்தகத்தை மறுபதிப்பு செய்யவோ வேறு மொழிகளில் மொழி பெயர்க்கவோ, அச்சடிக்கவோ கூடாது.

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | தமிழ்நாடு வளர்ச்சி நிர்வாகம் |
| ஆசிரியர் | : | TAF ஆசிரியர் குழு |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு, ஏப்ரல் 2025 |
| பக்கங்கள் | : | 488 பக்கங்கள் |
| விலை | : | ரூ.500 /– |

இப்புத்தக உருவாக்கத்திற்கு உதவி செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றி...!

AAMU PUBLICATION

TAF BOOKS Cuddalore

MOBILE 95669 74903, 89400 77746

WEBSITE www.tafiasacademy.com

E-MAIL tsiacademyho@gmail.com

FACEBOOK TNPSC – LIFE (TAF)

YOUTUBE : TAF IAS ACADEMY

TELEGRAM : TAF IAS ACADEMY

259/81 C, KOOLAKADAI BAZAR STREET,
TENKASI, Tirunelveli, Tamil Nadu, 627811

**Thanks To All The Contributors Of This Book..**

# பொருளடக்கம்


| வரிசை எண் | பாடத் தலைப்புகள் | பக்க எண்கள் |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு அடிப்படை தகவல்கள் | 01 - 16 |
| 2. | மனிதவள மேம்பாடு மற்றும் பிற மாநிலங்களுடன் தமிழ்நாடு ஒரு ஒப்பாய்வு | 17 - 29 |
| 3. | சமூக நீதி | 30 - 34 |
| 4. | தமிழ்நாட்டில் இட ஒதுக்கீடு | 35 - 54 |
| 5. | தமிழ்நாட்டில் கல்வி | 55 - 84 |
| 6. | தமிழ்நாட்டில் சுகாதாரம் | 85 - 108 |
| 7. | தமிழக மின்னாளுமை – 1 | 109 - 125 |
| 8. | தமிழக மின்னாளுமை – 2 | 126 - 140 |
| 9. | இணையத்தில் தமிழ் | 141 - 145 |
| 10. | தமிழக மறுமலர்ச்சி இயக்கங்கள் | 146 - 163 |
| 11. | தமிழக அரசியல் கட்சிகளின் வரலாறு | 164 - 178 |
| 12. | மாவட்ட நிர்வாகம் | 179 - 184 |
| 13. | மாநில நிர்வாகம் | 185 - 214 |
| 14. | தமிழ்நாட்டின் புள்ளி விவரங்கள் | 215 - 218 |
| 15. | தமிழ்நாட்டின் பொருளாதார போக்குகள் | 219 - 231 |
| 16. | தமிழக பொருளாதார ஆய்வு அறிக்கை (ம)<br>தமிழக பட்ஜெட் 2025 – 2026 | 232 - 238 |
| 17. | தமிழகத்தில் பேரிடர் மேலாண்மை | 239 - 258 |
| 18. | தமிழ்நாட்டின் புவியியல் கூறுகள் | 259 - 281 |

| எண் | பாடத் தலைப்புகள் | பக்க எண்கள் |
|---|---|---|
| 19. | மானுடப்புவியியல் – தமிழ்நாட்டில் வேளாண்மை | 282 - 292 |
| 20. | மானுடப்புவியியல் – தமிழ்நாட்டில் நீர்வளம் | 293 - 300 |
| 21. | மானுடப்புவியியல் – தமிழ்நாட்டில் தொழில்வளம் | 301 - 310 |
| 22. | மானுடப்புவியியல் – தமிழ்நாட்டில் தொலைதொடர்பு | 311 - 315 |
| 23. | பொது விநியோக முறை | 316 - 317 |
| 24. | தமிழக அரசுத் துறைகளின் திட்டங்கள் | 318 - 330 |
| 25. | தமிழகத்தின் சிறப்புகள் | 331 - 334 |
| 26. | தமிழகத்தின் சமீபத்திய சாதனைகள் | 335 - 384 |
| 27. | தமிழக அரசுத் துறைகளின் ஆரம்ப கால வளர்ச்சி | 385 - 389 |
| 28. | தமிழக அரசுத் துறைகள் மற்றும் அதன் நலத்திட்டங்கள் | 390 - 444 |
| 29. | தமிழக மாவட்டங்களின் சிறப்புகள் | 445 - 461 |
| 30. | மாதிரி வினாத்தாள் | 462 - 472 |
| 31. | அசல் வினாத்தாள் முதல் நிலை தேர்வு (PRELIMINARY) | 473 - 478 |
| 32. | அசல் வினாத்தாள் முதன்மை தேர்வு (MAINS) | 479 |




## தமிழ்நாடு 38 மாவட்டங்கள் புதிய வரைப்படம் 2022 முதல்..



## பாடத்திட்டம் - அலகு V (தமிழ்நாட்டில் வளர்ச்சி நிர்வாகம்)

தமிழ்நாட்டின் மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளும் அவற்றை தேசிய மற்றும் பிற மாநிலங்களுக்கான குறியீடுகளுடன் ஒப்பாய்வும் - தமிழ்நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு சமூக மறுமலர்ச்சி இயக்கங்களின் பங்களிப்பு - அரசியல் கட்சிகளும் பலதரப்பு மக்களுக்கான நலத்திட்டங்களும் - இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கான நியாயங்களும் சமூக வளங்களைப் பெறும் வாயப்புகளும் - தமிழ்நாட்டின் பொருளாதார போக்குகள் - தமிழ்நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியில் சமூகநலத்திட்டங்களின் தாக்கமும் பங்களிப்பும்; சமூக நீதியும் சமூக நல்லிணக்கமும் சமூகப் பொருளாதார மேம்பாட்டின் மூலாதாரங்கள்; தமிழ்நாட்டின் கல்வி மற்றும் நலவாழ்வு (Health) முறைமைகள்; தமிழ்நாட்டின் புவியியல் கூறுகளும் பொருளாதார வளர்ச்சியில் அவற்றின் தாக்கமும்; பல்வேறு துறைகளில் தமிழ்நாடு நிகழ்த்தியுள்ள சாதனைகள்; தமிழ்நாட்டில் மின்னாளுகை; பொது விழிப்புணர்வும் (Public Awareness) பொது நிர்வாகமும் - நலன்சார் அரசுத் திட்டங்களும் அவற்றின் பயன்பாடும், பொது விநியோக அமைப்புகளில் (Public Delivery Systems) நிலவும் சிக்கல்கள்; தற்போதைய சமூகப் பொருளாதார பிரச்சனைகள்; நடப்பு நிகழ்வுகள்.

குறிப்பு:

தமிழ்நாடு அரசின் 6 முதல் 12 வகுப்பு வரை உள்ள புதிய மற்றும் பழையபள்ளிப் பாடப்புத்தகம், தமிழக அரசு இணையதளம் மற்றும் தமிழக அரசு வெளியீட்டுள்ள குறிப்புகளில் இருந்தும் இப்புத்தகம் முழுப் பாடத்திட்டத்தையும் எளிமையாக மாணவர்களுக்கு பயனுள்ள வகையில் தொகுக்கப்பட்டுள்ளது.

மனித வள மேம்பாடு, தமிழ்நாடு பல்வேறு துறைகளில் செய்துள்ள சாதனைகள், சுகாதாரம் போன்ற தலைப்புகளில் உள்ள தகவல்கள் நடப்பு நிகழ்வுகள் அடிப்படையில் ஆண்டுக்கொரு முறை மாறக்கூடியவை. எனவே, மாணவர்கள் இந்த பாடங்களை நடப்பு நிகழ்வுகளுக்கு ஏற்றார் போல் புதுப்பித்துக் கொள்ளவும். தவறுகள், அச்சுபிழைகள் இருப்பின் தயவு செய்து தெரிவிக்கவும்... அடுத்து வரும் பதிப்புகளில் சரிசெய்து வெளியிடப்படும்.. நன்றி..

தொடர்புக்கு : 8940077746.

UNIT - V

# 01 தமிழ்நாடு அடிப்படை தகவல்கள்

## அறிமுகம் :

"கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளோடு
முன் தோன்றிய மூத்தகுடி "

– புறப்பொருள் வெண்பாமாலை

- தமிழ் இனத்தின் வரலாறு பெருமையும் **பாரம்பரியமும் மிக்கது.** உலகின் முதலில் தோன்றிய இனமும் மொழியும், **தமிழர்களும் தமிழ் மொழியுமே** ஆகும்.
- தமிழக நிர்வாகத்தை பற்றி அறிவதற்கு முன்பாக தமிழகம் பற்றிய அடிப்படைத் தகவல்களைப் பற்றி அறிவது ஒரு **தெளிவான புரிதலை ஏற்படுத்தும்.** அதன்படி, தமிழகத்தில் புவியியல் அமைப்பு, தமிழினத்தின் வரலாறு, அரசியல், பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, தமிழர்களின் பண்பாடு, மாவட்டங்கள் உருவான விதம், மாநகராட்சிகள், மற்றும் பல தகவல்களைச் சுருக்கமாக இப்பாடத்தில் காணலாம்.

## தமிழர்கள் நிர்வாகத்தின் முன்னோடி :

- 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் **திருவள்ளுவர் தாம் இயற்றிய திருக்குறளில் அரசனின் ஆட்சி செய்யும் முறை, அமைச்சர்கள், குடிமக்களை காக்கும் முறை,** தொழில்கள், நிர்வாகம் தொடர்பாக சிறப்பாக எடுத்துரைக்கிறார் இதிலிருந்தே தமிழனின் ஆட்சி நிர்வாகத்தின் வரலாற்றுச் சிறப்பினை உணரலாம்.
- பிற்காலத்தில் மன்னர் ஆட்சிமுறை மாறி அமைச்சர் ஆட்சிமுறை தோன்றும் என்பதை ஊகித்த வள்ளுவ பெருந்தகை அரசனை விட எதிர்காலத்தில் நாட்டினை வழிநடத்த போவது அமைச்சர்கள் தலைமையில் அமைந்த அமைச்சரவையே என்பதை உணர்த்த இன்றைய நிர்வாகத்தின் **அமைச்சர் வகையிலான ஆட்சிமுறையை** சிறப்பாக எடுத்து சொல்லி இருப்பது வியப்பில் ஆழ்த்துகிறது. **தமிழர்களே உலகில் ஆட்சி நிர்வாகத்தின் முன்னோடிகளாக இருந்துள்ளனர்.**

## சோழரின் குடவோலை முறை :

- உலகம் மன்னராட்சியில் இயங்கும்போதே **மக்களாட்சிக்கு வித்திட்டவர்கள்** தமிழர்கள் என்பதை பெருமையோடு கூறிக்கொள்ளும் ஆதாரங்கள் தமிழகத்தில் நிறைந்துள்ளன.
- **முதலாம் பராந்தக சோழனின்** உத்திரமேரூரில் அமைந்துள்ள கல்வெட்டுக் குறிப்புகளில் குடவோலை முறையைப் பற்றி அறிந்து கொள்ளும் போது இன்றைய **புல்லிதழ் ஜனநாயகம்** அதாவது **அதிகார பரவலாக்க முறை** என்றுசொல்லப்படுகின்ற உள்ளாட்சி அரசாங்க முறையை எவ்வாறு பின்பற்றி நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் அவன் இருக்கும் இடத்திற்கே அரசின் சேவைகள் சென்றடைந்தது என்பதை அறியும் போது தமிழனின் நிர்வாகமுறை பிரமிக்க வைக்கிறது.
- பிற்காலத்தில் **ரிப்பன் பிரபுவினால்** கொண்டு வரப்பட்ட பஞ்சாயத்து இராஜ்ய முறையை சுமார் ஆயிரத்தி இருநூறு ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் தமிழ் மண்ணில் செயல்படுத்தியவர்கள்.

## தமிழகத்தின் அடிப்படை தகவல்கள் :

- 2024ஆம் ஆண்டு இந்திய மாநிலங்களின் அடிப்படையில் தமிழ்நாடு என்பது **இந்தியாவின் 28 மாநிலங்களில்** ஒன்றாகும். இதன் தலைநகரமாக சென்னை உள்ளது.
- தமிழ்நாடு இந்திய துணைக்கண்டத்தின் **தென்முனையில்** அமைந்துள்ளது.
- தமிழ்நாடு, இந்தியா சுதந்திரம் அடைந்த போது இருந்த மாநிலங்களில் ஒன்றாகும். 1956 இல் மாநிலங்கள் மொழி வாரியாக பிரிக்கப்பட்ட போது இருந்த 14 மாநிலங்களில் தமிழ்நாடு அப்போதே உருவாகி இருந்தது. தமிழ்நாட்டில் இருந்து தான் பிற மாநிலங்கள் பிரிக்கப்பட்டனவே அன்றி தமிழ்நாடு என்றும் தனி மாநிலமாக இருந்து வருகிறது.




- ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் தமிழகம் ஆங்கிலத்தில் **மெட்ராஸ்பிரசிடென்ஸி** என்றும் தமிழில் மெட்ராஸ் மாகாணம் என்றும்அழைக்கப்பெற்றது.
- இதனைத் தமிழ்நாடு என்று மாற்றக்கோரி போராட்டங்கள் நடைபெற்றன.
- சங்கரலிங்கனார் என்பவர் **76 நாட்கள் உண்ணாநோன்பு** இருந்து உயிர்துறந்தார்.
- பின்னர் மதராசு ஸ்டேட் என்று இருந்த பெயர் **1969** ஆம் ஆண்டு ஜனவரி 14ம் தேதி தமிழ்நாடு என்று மாற்றப்பட்டது.
- தமிழ்நாடு இந்திய மாநிலங்களில் பரப்பளவில் **10-ஆகவும்,** மக்கள் தொகையில் **ஆறாவதாகவும்** விளங்குகிறது.
- இந்திய மொத்த உள்நாட்டு உற்பத்திக்குப் பங்களிப்பதில் **இரண்டாவதாகவும்** உள்ளது.
- இந்தியாவில் **6%** மக்கள்தொகையை கொண்டிருந்தும் மிகக் கூடுதலான வணிக நிறுவனங்கள் கொண்ட மாநிலமாகவும் **(10.56%)** மொத்த வேலை வாய்ப்புகள் கொண்ட மாநிலங்களுள் **இரண்டாவதாகவும் (9.97%)** விளங்குகிறது.

## தமிழகம் - ஒரு பார்வை :

| தமிழகம் | |
|---|---|
| நாடு | இந்தியா - தென் பகுதி |
| மாநில உருவாக்கம் | 1 நவம்பர் 1956 |
| தலைநகரம் | சென்னை |
| மாவட்டங்கள் | 38 |
| ஆளுநர் | R.N. ரவி |
| சட்டமன்றம் | ஓரவை சட்டமன்றம் |
| சட்டமன்ற தொகுதி | 234 |
| மக்களவை | 39 |
| மாநிலங்களவை | 18 |
| பரப்பளவு | 1,30,058 ச.கி.மீ (பரப்பளவில் 10வது மிகப்பெரிய மாநிலம்) |
| மக்கள் தொகை | 7,21,47,030 (மக்கள் தொகையில் 6வது மிகப்பெரிய மாநிலம்). |
| மக்கள் தொகை அடர்த்தி | 555 பேர் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு |
| அலுவலக மொழி | தமிழ் |
| மனித மேம்பாட்டு குறியீடு (HDI) | 0.708 (2018-ன் படி) |
| படிப்பறிவு | 80.33% (2011-ன் படி) |
| பாலின விகிதம் | 996/1000 |
| கூடுதல் அலுவலக மொழி | ஆங்கிலம் |
| இணையதளம் | www.tn.gov.in |

## ஐக்கிய நாடுகள் முன்னேற்றக் கூட்டமைப்பு (UNDP)

## UNITED NATIONS DEVELOPMENT PROGRAMME

- ஐக்கிய நாடுகள் முன்னேற்றக் கூட்டமைப்பு என்பது ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு **துணை அமைப்பாகும். 1965 ம்** ஆண்டு தொடங்கப்பட்டது. **தலைமையிடம்** நியூயார்க். **இதன் நோக்கம்** - உறுப்பு நாடுகளின் **வளர்ச்சி சார்ந்த உதவிகளை** செய்து தருதல்.
- **1990** முதல் ஐக்கிய நாடுகள் முன்னேற்றக் கூட்டமைப்பு (UNDP) **ஒவ்வொரு ஆண்டும்** மனித மேம்பாட்டு அறிக்கையைப் பிரசுரம் செய்கிறது. இக்குறியீடு கீழ்க்கண்ட **மூன்று** குறியீடுகளை அடிப்படையாக கொண்டது.
    1. வாழ்நாள் குறியீடு
    2. கல்வி குறியீடு
    3. மொத்த உள்நாட்டு உற்பத்தி
- இக்குறியீடு **நாடு, மாநிலம் மற்றும் மாவட்ட அளவில்** தற்போது தயாரிக்கப்படுகிறது.
- அரசாங்கத்திற்கு மக்களின் உண்மையான **வாழ்க்கைத் தரத்தைக் கண்டறிய** HDI பயன்படுகிறது.

> - இந்தியாவில் மனித வளங்களின் வளர்ச்சிக்கு **மனிதவள மேம்பாட்டு அமைச்சகம்** பொறுப்பாகும். இதன் தலைமையகம் **புதுடெல்லியில் சாஸ்திரிபவனில்** அமைந்துள்ளது. **(கல்வி அமைச்சகம்)**

## வாழ்க்கைத் தர அளவீடுகள்

- உற்பத்தித்துறையில் **பயன்படுத்தக்கூடிய மனிதவளங்களை** கொண்டிருக்கும் மக்களையே மனித வளம் என்ற சொல் குறிக்கும்.
- ஒரு நாட்டின் மக்களின் வாழ்க்கைத் தர அளவீடுகள் என்பது **மனித வள மேம்பாட்டு குறீயீடு (HDI) வாழ்க்கைத் தர குறியீடு, (PQLI), மொத்த நாட்டு மகிழ்ச்சி குறியீடு (GNHI)** ஆகியவற்றை பொருத்தது.

### 1. மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI) :

### HUMAN DEVELOPMENT INDEX


மஹபூல் உல் ஹக்

- HDI - என்பதை **பாகிஸ்தான்** நாட்டைச் சார்ந்த பொருளியல் அறிஞர் **மஹபூல் உல் ஹக்** (MahbululHaq) என்பவரும், இந்தியாவைச் சேர்ந்த **அமர்த்தியா குமார் சென்** அவர்களும் **1990** - ல் மேம்படுத்தினர்.
- இதனை ஐக்கிய நாடுகள் முன்னேற்ற திட்டம் (UNDP) வெளியிடப்படுகிறது.

### மனித வள மேம்பாட்டு அளவீடுகள் :


அமர்த்தியா சென்

- இது எதிர்பார்க்கப்படும் **வாழ்நாள் குறியீடு**, **கல்விக் குறியீடு** மற்றும் **மொத்த உள்நாட்டு உற்பத்தி** அடிப்படையில் அமைக்கப்பட்டது.
    1. வாழ்நாள் (ஆயுள்காலம்) என்பது பிறப்பின் போது வாழ்நாள் எதிர்பார்ப்பின் மூலம் கணக்கிடப்படுகிறது.
    2. கல்வி அடைவுகள்.
    3. வாழ்க்கைத்தரமானது வாங்கும் சக்தியின் அடிப்படையிலான தனிநபர் வருமானத்தைக் கொண்டு கணக்கிடப்படுகிறது.

### மனித வள மேம்பாட்டுக் கணக்கீடு :

- மனித மேம்பாட்டுக் குறியிட்டைக் கணக்கிடுவதற்கு முன் **குறைந்த பட்ச** மற்றும் **அதிகபட்ச** மதிப்புகள் ஒவ்வொரு குறியீட்டிலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.
- ஒவ்வொரு பரிமாணத்திலும் அதன் செயல்பாடுகள் **0 க்கும் 1 க்கும்** இடையிலான மதிப்பில் கீழ்க்கண்ட முறையில் கணக்கிடப்படுகிறது.

UNIT - V

# 03 சமூக நீதி

**சமூகநீதி என்றால் என்ன?**

- **சமூகமேலாதிக்க உணர்வினைப் பெற இன, மத, மொழி, சாதி மற்றும் பண்பாட்டுக்** குழுவினர் மற்ற குழுவினரின் சமூக உரிமைகளைப் பறித்தெடுக்க முயலும்போது அல்லது தடுக்கும்போது சமூகப் பகை முரண்கள் உருவாகின்றன.
- சமூக நீதி என்ற கருத்தானது **தனி நபருக்கும் சமூகத்திற்கும்** இடையேயுள்ள சமமான நியாயமான உறவைக் குறிக்கிறது.
- தங்கள் மீதான மேலாதிக்கத்தை மறுத்துத் தங்களுக்கு உரிய உரிமைகளைச் சமமாகப் பெற்றிட நடத்துகிற போராட்ட உணர்வினையே சமூக நீதி என்கிறோம்.
- தனிநபர்களின் சமூக செயல்பாடுகளுக்குத் தேவையானவற்றைப் பூர்த்தி செய்து, பாகுபாடற்ற நீதியையும் நியாயத்தையும் நிலை நிறுத்துவதாகும்.
- தற்காலத்தில் உலகளாவிய பல சமூக அமைப்புகள் சமூகப் பெயர்ச்சிக்கான தடைகளை உடைத்து, சமூகப் பாதுகாப்பை உண்டாக்கி, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் கலைக்கிறது.



**உலகளவில் சமூக நீதி (Social Justice):**

- சமூக நீதி என்ற கருத்தாக்கமானது தனிநபருக்கும் சமூகத்திற்கும் இடையேயுள்ள சமமான நியாயமான உறவைக் குறிக்கிறது.
- பொதுவாக வேறுபாடுகளைப் பொருளாதாரப் பரவல், தனிப்பட்ட வாய்ப்புகள் மற்றும் சமூக செல்வாக்கின் மூலம் இதனைக் கணிக்கலாம். மேற்கத்திய நாடுகள் மற்றும் பழமையான ஆசிய நாடுகளில் சமூக நீதி என்ற கருத்தாக்கமானது தனிநபர்களின் சமூக செயல்பாடுகளுக்குத் தேவையானவற்றைப் பூரத்தி செய்து பாகுபாடற்ற நீதியையும் நியாயத்தையும் நிலைநிறுத்துவதாகும்.
- தற்காலத்தில் உலகளாவிய பல சமூக அமைப்புகள் சமூகப் பெயர்ச்சிக்கான தடைகளை உடைத்து, சமூகப் பாதுகாப்பை உண்டாக்கி, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் கலைக்கிறது.
- சமூக நீதி மூலம் ஒரு சமூகத்தில் உள்ள அரசு அல்லது அரசு சாரா நிறுவனங்களின் உரிமையையும் கடமையையும் உறுதிசெய்து, சமுதாயத்தின் ஆதாயங்களையும் சுமைகளையும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.
- வரி, சமூகக் காப்பீடு, பொது உடல் நலவியல் பொதுக்கல்வி, பொதுப்பணி, தொழிலாளர் சட்டம், சந்தை ஒழுங்காணையம் போன்ற நிறுவனங்களில் வளங்களையும், வாய்ப்புகளையும் பகிர்ந்து கொள்ள முடிகிறது.

> ✍ **சமூக நீதி என்பது வெறும் சாதி அடிப்படையிலானது அல்ல. சமூகத்தின் ஒட்டு மொத்தமாக பாதிக்கப்பட்டவர்கள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அவர்களுக்கு உதவுவதே சமூக நீதி.**

**உலக சமூக நீதி நாள் :**

- சமூக நீதிக்கான உலக நாள் அல்லது நீதி நாள் (World Day of Social Justice) என்பது உலக நாடுகள் முழுவதும் ஆண்டுதோறும் பிப்ரவரி 20-ஆம் நாளன்று கடைப்பிடிக்கப்படுகிறது.
- 2009-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் **சமூக நீதி தினம்** கடைப்பிடிக்கப்படுகிறது.
- வறுமையைப் போக்கவும், வேலையின்மையின் பிரச்சினைகளைக் கையாளும் முயற்சிகளை ஊக்குவிக்கவும், இந்நாள் அங்கீகரிக்கப்படுகிறது.
- மேலும் இந்நாளில், ஐக்கிய நாடுகள் அவை மற்றும் சர்வதேச தொழிலாளர் அலுவலகம் உட்பட, பல அமைப்புகள் மக்கள் சமூக நீதி முக்கியத்துவம் பற்றிய அறிக்கைகளைத் தயாரிக்க அமைக்கப் பெற்றுள்ளது.

UNIT - V

# 05 தமிழ்நாட்டில் கல்வி

**அறிமுகம் :**

**"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்ற யவை" – குறள் 400**

- ஒருவற்கு **அழிவில்லாத சிறப்பை தருவது** கல்வி என்கிறார் வள்ளுவர். தனி ஒவ்வொருவரின் கல்வி வளர்ச்சி நாட்டின் வளர்ச்சியாக இருக்கிறது. இந்த உலகில் ஒருவர் பெறுகிற **அறிவு, அனுபவம், ஆற்றல்** ஆகியவற்றின் தொகுப்பே கல்வி எனப்படும்.
- அவர் பெறுகிற கல்வி அவரது ஆளுமைக்கும், ஆற்றலுக்கும் அடித்தளமாக இருந்து அவரின் ஒவ்வொரு செயலையும் சிறப்பாகச் செய்ய வழி அமைக்க வேண்டும். கல்வியின் வளர்ச்சி என்பது இன்றைய நிலையில் ஒரு நாட்டின் முன்னேற்றத்துடன் ஒப்பிடப்படுகிறது.
- **"கல்வியில் சிறந்த தமிழ்நாடு புகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு"** என்று பாடினார் பாரதி.
- பழங்காலத்திலிருந்தே கல்வியில் சிறப்புற்றிருந்த தமிழகத்தில் கல்வியின் வளர்ச்சி குறித்து இப்பாடத்தில் காணலாம்.

## விடுதலைக்கு முன் தமிழகத்தில் கல்வி வளர்ச்சி

- இந்தியாவில் கல்வி என்பது **6 நிலைகளை** கொண்டது. அவையாவன,
  - 1. குழந்தைக் கல்வி
  - 2. தொடக்கக் கல்வி
  - 3. இடைநிலைக் கல்வி
  - 4. மேல்நிலைக் கல்வி
  - 5. இளங்கலைப் பட்டம்
  - 6. முதுகலைப் பட்டம்

**பண்டைக்காலத்தில் கல்வி :**

- **"இளமையில் கல்"** என்பது பண்டைக் காலத்தில் வழங்கிய முதுமொழி.
- பல தமிழ்ப் புலவர்கள் கல்வியின் முன்னேற்றத்திற்காக பாடுபட்டுள்ளார்கள்.
- சங்க காலத்தில் வாழ்ந்த அரசர்களும், தளபதிகளும் கூட பல பாடல்களை இயற்றியுள்ளார்கள்.
- பெண்கள் பல்வேறு கலைகளான இயல், இசை, நாடகம் போன்றத் துறைகளில் மேம்பாடுற்று இருந்தார்கள் என சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.
- பெண்பாற் புலவர்களான **ஔவையார், காக்கைப் பாடினியார், முடத்தாமக் கண்ணியார்** போன்ற புலவர்கள் சங்க காலத்தில் வாழ்ந்துள்ளனர்.
- மேலும் சங்க கால மன்னர்கள் கல்வியை ஊக்குவித்தனர். இந்தக் கால கட்டங்களில் கிராமங்களில் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் **மரத்தின் நிழலில் அல்லது கோயில்களில்** செயல்பட்டன. மேல்நிலைக் கல்விக்கூடங்களும் காணப்பட்டன. அவை **மடங்கள், பள்ளிகள்** அல்லது **விகாரங்கள்** என அழைக்கப்பட்டன.

**பல்லவர் காலத்தில் கல்வி வளர்ச்சி :**



- பல்லவர்கள் காலத்தில், **கல்வித்துறையில் முன்னேற்றம்** காணப்பட்டது. இந்து, புத்த மற்றும் சமணர்களுக்கான கல்விக்கூடங்கள் **காஞ்சிபுரம்** போன்ற இடங்களில் அமைக்கப்பட்டன.
- காஞ்சிபுரம் **சமஸ்கிருத மொழியின் சிறந்த** இலக்கியக் கூடமாக திகழ்ந்தது.
- இங்குள்ள **கைலாசநாதர் கோயில்** பொது ஆவணக் காப்பகமாகவும் விளங்கியது.
- யுவான் சுவாங் என்னும் சீனப்பயணி நரசிம்மவர்ம பல்லவர் காலத்தில் காஞ்சிபுரத்திற்கு வருகை புரிந்தார்,
- **நாளந்தா பல்கலைக் கழகத்தின் வேந்தராக இருந்த தர்மபாலர் காஞ்சிபுரத்தை சேர்ந்தவர் ஆவார்.**

**யுவான் சுவாங் தன்னுடைய குறிப்புகளில் காஞ்சிபுரத்தைப் பற்றி பின்வருமாறு தெரிவிக்கிறார்:**

"காஞ்சிபுரம் என்ற நகரம் கற்றலின் மையமாக விளங்குகிறது"

- **சைவ மற்றும் வைணவ மடங்கள்** கல்வியை ஆதரித்தன. **ஆழ்வார்களும் நாயன்மார்களும்** பக்தி இலக்கியங்களை பாடி மக்களிடையே பக்தி மார்க்கத்தை வளர்த்தனர்.
- விகாரங்கள், சமணப்பள்ளிகள் புத்த மற்றம் சமண மத தத்துவங்களைப் பரப்பின.

**சோழர்கள் காலத்தில் கல்வி வளர்ச்சி :**

- சோழர்களின் காலம் தமிழ் இலக்கிய வரலாற்றில் **மிகவும் அறிவார்ந்த** மற்றும் **புதுமைகளைப்** புகுத்திய காலம் எனலாம்.
- தமிழ்வழிக் கல்வியானது **கோயில் மற்றும் சமயத்துடன்** நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தது. மக்களுக்கு இலவச கல்வி அளிக்கப்பட்டது. கலைத்திட்டமும் பாடத்திட்டமும் தத்துவத்தின் அடிப்படையைக் கொண்டிருந்தது.
- அக்கால கல்வெட்டுகளிலிருந்து **ஆசிரியர்களின் தகுதிகள்,கற்பித்தல் முறைகள்,** ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட ஊதியம், மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவு மற்றும் பள்ளிகளுக்கு அளித்த நிலங்கள் குறித்த பல தகவல்களை அறிந்து கொள்ள முடிகிறது. **இராஜராஜனின் சதுர்வேதி மங்கலம்** (எண்ணாயிரம் முந்தைய தென் ஆற்காடு மாவட்டத்தில் அமைந்திருந்தது) புகழ்பெற்ற **வேதக் கல்லூரிக்கு இருப்பிடமாக** இருந்தது.
- **திருபுவனையில்** (பாண்டிச்சேரியில் உள்ளது) வேதக் கல்லூரி செழித்தோங்கியது.
- **திருவிடைக்காளை கல்வெட்டு** நூலகத்தைப் பற்றியும், வீரராஜேந்திர சோழனின் திருவாடுதுறைக் கல்வெட்டு **மருத்துவப் பள்ளி** பற்றியும் குறிப்பிடுகிறது.
- **எண்ணாயிரம், திருபவணி மற்றும் குன்றத்தூர்** ஆகிய இடங்கள் பிற்காலச் சோழர்கள் காலத்தில் காணப்பட்ட கல்விக்கூடங்கள் ஆகும்.

❖ பெரியபுராணத்தை எழுதிய சேக்கிழார் சென்னையை அடுத்த **குன்றத்தூரைச்** சார்ந்தவர்.

**பாண்டியர்கள் காலத்தில் கல்வி வளர்ச்சி :**

- பாண்டிய மன்னர்கள் சமஸ்கிருதத்தை ஆதரித்ததை அவர்களின் செப்புத் தகடுகளின் மூலம் அறியலாம்.
- ஆசிரியர்களுக்கு நிலங்கள் வழங்கப்பட்டன. அவ்வகை நிலங்கள் **சாலபோகம்** என்றழைக்கப்பட்டது. (**எ.கா**: கன்னியாகுமரியிலுள்ள வல்லப பெருஞ்சாலை) பாண்டியர்கள் காலத்தில் **காந்தளூர் சாலையில் புகழ்பெற்ற கல்லூரி** இருந்தது. கல்வியை மேம்படுத்துவதில் மடங்கள் முக்கியப் பங்குவகித்தன.
- கல்வி நிலையங்கள் பாண்டியர்கள் காலத்தில் **சாலைகள், கடிகை, வித்யாசாதனம்** என்ற பெயரில் அழைக்கப்பட்டன.
- பாண்டியர்கள் திருவனந்தபுரத்திற்கு அருகிலுள்ள **காந்தளூர்ச் சாலை** மற்றும் **பார்திபசேகரபுரம்** ஆகிய இடங்களில் கல்வி நிலையங்களை அமைத்தனர்.

**இந்தியாவில் மருத்துவ நிர்வாகம்**

**மத்திய சுகாதார (ம) குடும்ப நலத்துறை அமைச்சகம்**

↓

மத்திய சுகாதாரத்துறை அமைச்சர்

↓

மத்திய சுகாதார கவுன்சில்

↓

**DGHS** | **CDSCO** | **DEPT OF HR**

1. DGHS - பொது சுகாதார சேவைகள் இயக்ககம். (Directorate General of Health Services)
2. CDCO - மத்திய மருந்து கட்டுப்பாட்டு நிறுவனம். (Central Drugs Control Organization)
3. Dept of HR - சுகாதார ஆராய்ச்சி மையம். (Health Research Department)

**மத்திய சுகாதாரம் (ம) குடும்பநல அமைச்சகம்**

✶ சுகாதாரத்துறையின் 2 முக்கியதுறைகள்.
  - சுகாதாரத்துறை
  - குடும்பநலத்துறை

✶ அரசியலமைப்பின் 7-வது அட்டவணையில் சுகாதார அமைச்சகத்தின் பணிகள் இரண்டு பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது.

| மத்திய பட்டியலில் உள்ள சுகாதார பணிகள் | பொதுப் பட்டியலில் உள்ள சுகாதாரத் துறைகள் |
|---|---|
| 1. சர்வதேச சுகாதாரம் மேம்படுத்துதல். | 1. தொற்று நோய் கட்டுப்பாடு, அழித்தல். |
| 2. ஆராய்ச்சி நிலையம் அமைத்து ஊக்குவித்தல். | 2. கலப்படத்தை தடுத்தல். |
| 3. மருத்துவ கல்வியை ஒழுங்குப்படுத்துதல். | 3. மருத்துவ (ம) விஷத்தை கட்டுப்படுத்தல். |
| 4. மருந்தின் தரத்தை பராமரித்தல். | 4. தொழிலாளர் நலம். |
| 5. மக்கள்தொகை கணக்கெடுப்பு (ம) புள்ளி விவரங்களை சேகரித்தல். | 5. பொருளாதார, சமூக நலத்திட்டம். |

**சுகாதார கொள்கைகள் :**

✶ இந்திய மக்களின் சுகாதார நலனை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**இந்தியாவின் சுகாதார கொள்கைகள் :**

✶ தேசிய சுகாதார கொள்கை - 1983
✶ தேசிய சுகதார கொள்கை - 2002
✶ தேசிய சுகாதார கொள்கை - 2017

## 1. DIRECTORATE OF E – GOVERNANCE
## மின்னாளுமை ஆணையரகம்

* தமிழக அரசின் அனைத்து மின்னாளுமை முயற்சிகளையும் தலைமையேற்று செயல்படுத்திட, **மின்னாளுமை ஆணையரகம் 2006 ஆம் ஆண்டில்** உருவாக்கப்பட்டது.

**<u>நிறுவனக் கட்டமைப்பு :-</u>**

**தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் துறை**
**மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கீழ்**

↓

**முதன்மை செயலாளர்**
**தகவல்தொழில்நுட்பவியல் துறை**

↓

**<u>மின்னாளுமை ஆணையரகம்</u>**

**ஆணையர், மின் ஆளுமை**

↓

**இணை இயக்குனர், மின் ஆளுமை**

↓

- துணை இயக்குனர் (நிர்வாகம்)
  - ↓ நிர்வாகம் / கணக்கு அலுவலர்
- இணை இயக்குனர் (தொ.நு)
  - ↓ முதுநிலை கணினி பகுப்பாய்வாளர்கள் / முதுநிலை கணினி பொறியாளர்கள்
  - ↓ கணினி பகுப்பாய்வாளர்கள் / கணினி பொறியாளர்கள்
  - ↓ உதவி கணினி பகுப்பாய்வாளர்கள் / உதவி கணினி பொறியாளர்கள்

UNIT - V

# 10 தமிழக மறுமலர்ச்சி இயக்கங்கள்


**தமிழ் மறுமலர்ச்சி :-**

- காலனியத்தின் பண்பாட்டு ஆதிக்கமும் மனிதநேயத்தின் எழுச்சியும் இந்தியத் துணைக் கண்டத்தின் **சமூகப் - பண்பாட்டு** வாழ்வில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தது.
- நவீன தமிழ்நாடும் அத்தகைய வரலாற்று மாற்றத்தை அனுபவித்தது. **தமிழ் மொழி மற்றும் கலாச்சாரம்** அவர்களின் அடையாள கட்டுமானத்தில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தது.
- **அச்சு இயந்திரத்தின் அறிமுகமும், திராவிட மொழிகளின் மீது மேற்கொள்ளப்பட்ட மொழியியல்** ஆய்வுகள் மற்றும் பலவும் தமிழ் மறுமலர்ச்சி செயல்பாடுகளுக்கு அடியுரமாய் விளங்கின.
- அச்சு இயந்திரத்தின் வருகைக்குப் பின்னர் வந்த தொடக்க ஆண்டுகளில் **சமயம் சார்ந்த நூல்களை** வெளியிடும் முயற்சிகளே பெருமளவில் மேற்கொள்ளப்பட்டன.

**பிராமணர் அல்லாதார் இயக்கம் தோன்ற காரணம் :-**


சீகன்பால்கு

- இவ்வியக்கம் தோன்ற முக்கிய காரணம் **அச்சுத் தொழில் நுட்பத்தின் வருகை** ஆகும்.
- ஐரோப்பிய மொழிகள், தவிர்த்து அச்சில் ஏறிய மொழிகளில் **முதல் மொழி தமிழ்மொழியாகும்.**
- மிக முன்னதாக **கி.பி.1578-ல் தம்பிரான் வணக்கம்** எனும் **தமிழ் புத்தகம் கோவாவில்** வெளியிடப்பட்டது.
- **கி.பி.1709 - ல்** முழுமையான அச்சகம் **சீகன்பால்கு** என்பவரால் **தரங்கம்பாடியில்** நிறுவப்பட்டது.
- **வி. கனகசபை பிள்ளையின் 1800 ஆண்டுக்கு முன் தமிழர்கள்** என்ற நூலில் ஆரியர்கள் வருவதற்கு முன்பே **தமிழர்கள் மிகச் சிறந்த நாகரீகத்தை படைத்திருந்தனர்** என்பதைச் சுட்டிக் காட்டினார்.
- தொடக்ககால தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றான **திருக்குறள் கி.பி.1812-ல்** வெளியிடப்பட்டது.
- **கி.பி. 1816- ல் புனித ஜார்ஜ் கோட்டையில் கல்லூரியினை நிறுவிய F.W.எல்லிஸ்(1777-1819), தென்னிந்திய மொழிகள் தனிப்பட்ட மொழிக்குடும்பத்தை சார்ந்தவை, அவை இந்தோ ஆரியக் குடும்ப மொழிகளோடு தொடர்பில்லாதவை** எனும் கோட்பாட்டை உருவாக்கினார்.


ராபர்ட் கால்டுவெல்

- **இராபர்ட் கால்டுவெல்** (1814 - 1891) **திராவிட** அல்லது **தென்னிந்திய மொழிகளின் ஒப்பீட்டு இலக்கணம்** எனத் தலைப்பிடப்பட்ட நூலில் இக்கோட்பாட்டை **கி.பி. 1856-ல்** விரிவுபடுத்தினார்.
- **திராவிட மொழிகளுக்கிடையில் நெருக்கமான ஒப்புமை இருப்பதையும் அப்படியான ஒப்புமை சமஸ்கிருதத்துடன் இல்லை** என்பதையும் நிறுவினார் மேலும் **தமிழின் தொன்மையையும்** நிலைநாட்டினார்.
- இக்காலகட்டத்தைச் சேர்ந்த அறிவார்ந்த தமிழர்கள் **தமிழ் / திராவிட / சமத்துவம்** மற்றும் **சமஸ்கிருதம் / ஆர்யம் / பிராமணியம்** ஆகிய இரண்டுக்குமிடையேயுள்ள அடிப்படை வேறுபாடுகளை அடையாளம் கண்டு கொண்டனர்.
- அவர்கள் **தமிழ்மொழியே திராவிடர்களின் மொழி**யென்றும் **தமிழர்கள் பிராமணர்கள் அல்ல** என்றும் அவர்களின் **சமூக வாழ்வில் சாதிகளில்லை, பாலின வேறுபாடில்லை, சமத்துவம் நிலவியது** எனவும் வாதிட்டனர்.
- இச்சிந்தனைகள் **பி. சுந்தரனாரால் (1855-1897**) எழுதப்பெற்ற **மனோன்மணியம்** எனும் **நாடக நூலில்** இடம் பெற்றுள்ள **தமிழ்மொழி வாழ்த்துப் பாடலில்** மெய்பிக்கப்பட்டுள்ளது.

UNIT - V

# 13 மாநில நிர்வாகம்

| பகுதி - VI | விதி 152 - 237 |
|---|---|

**மாநில நிர்வாகம் (விதி 152 – 167)**

- ஆளுநர்
- முதலமைச்சர்
- அமைச்சரவை

**சட்டமன்றம் (விதி 168 – 213)**

- சட்ட மேலவை
- சட்டப்பேரவை

**நீதித்துறை (விதி 214 – 237)**

- உயர்நீதி மன்றங்கள்
- கீழ்நீதி மன்றங்கள்

| ஆளுநர் (GOVERNOR) | |
|---|---|
| விதி 153 | மாநில ஆளுநர்கள் |
| விதி 154 | மாநில நிர்வாக அதிகாரம் |
| விதி 155 | ஆளுநர் நியமனம் |
| விதி 156 | ஆளுநரின் பதவிக்காலம் |
| விதி 157 | ஆளுநர் நியமனத்திற்கான தகுதிகள் |
| விதி 158 | ஆளுநர் நியமனத்திற்கான நிபந்தனைகள் |
| விதி 159 | ஆளுநரால் எடுக்கப்படும் உறுதிமொழியும் பதவிப் பிரமாணமும் |
| விதி 160 | தற்செயலான சில நிகழ்வுகளில் ஆளுநரின் செயல்பாடுகள் |
| விதி 161 | ஆளுநரின் மன்னிக்கும் அதிகாரம் |
| விதி 162 | மாநிலங்களுக்கு நிர்வாக அதிகாரத்தை நீட்டித்தல் |
| விதி 163 | அமைச்சரவை ஆளுநருக்கு உதவியும் ஆலோசனையும் அளித்தல் |

UNIT - V

# 14 தமிழ்நாட்டின் புள்ளி விவரங்கள்

**மக்கள் தொகை :**

- ஒரு நாட்டின் வரையறுக்கப்பட்ட பகுதியில் வாழும் மக்களின் எண்ணிக்கையே மக்கள் தொகை எனப்படுகிறது.
- மக்கள்தொகைப் பண்புகள் பற்றிய புள்ளிவிவர ஆய்வுகள் மக்கட்தொகையியல் என அழைக்கப்படுகின்றது.
- மக்கட்புவியியலாளர்கள் மக்கள்தொகை பற்றிய ஆழமான மற்றும் விரிவான ஆய்வை மேற்கொள்கின்றனர்.
- மக்கள் தொகையின் அதிகரிப்பு பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் காரணியாக இருக்கலாம்.
- எனவே அதிக மக்கள் தொகை என்பது நமது நாட்டின் வளர்ச்சிக்கு எதிரான முக்கியப் பிரச்சினைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

**தமிழ்நாட்டின் மக்கள்தொகை வளர்ச்சி :**

- **2011** ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள்தொகை **7.21 கோடி** ஆகும்.
- மக்கள் தொகை 10 ஆண்டுகளில் கிட்டத்தட்ட **ஒரு கோடி மக்கள்** தொகை அதிகரித்துள்ளது.
- 2011ஆம் ஆண்டில் மாநிலத்தில் ஆண், பெண் மக்கள் தொகை முறையே **3.61 கோடி** மற்றும் **3.60 கோடி** ஆகும்.
- இதில் 2001ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 3,14,00,909 மற்றும் 3,10,04,770 ஆகும்.
- இது மாநிலத்தின் மக்கள் தொகையில் ஆணும் பெண்ணும் கிட்டத்தட்ட சமமாக இருப்பதைக் காட்டுகிறது.
- 2001-2011, 10 ஆண்டு காலத்தில் மக்கள்தொகை வளர்ச்சி **15.6%** ஆக இருந்தது. ஆனால் இதற்கு முந்தைய பத்தாண்டுகளில் இது 11.19 சதவீதமாக இருந்தது.
- 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவின் மொத்த மக்கள்தொகையில் தமிழ்நாட்டின் மக்கள் தொகை 5.96% ஆகும். 2001இல் இது 6.07 சதவீதம் ஆகும்.

**மக்கள் தொகை பரவல் :**

- மொத்த மக்கள்தொகையின் அடிப்படையில் தமிழ்நாடு பின்வரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**அதிக மக்கள் தொகையைக் கொண்ட பகுதிகள் :**

- 2011, மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி மாவட்ட அளவில் 4.219 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட சென்னையானது அதிக அளவு நகர்ப்புற மக்கள் தொகையைக் கொண்டு **முதல் இடத்தில்** உள்ளது.
- கோவை, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், தர்மபுரி, சேலம், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகியவை தமிழ்நாட்டில் அதிக மக்கள் தொகையைக் கொண்ட மாவட்டங்களாகும்.
- இம்மாவட்டங்களில் அதிக அளவிலான மக்கள் தொகை இருப்பதற்குக் காரணம் விவசாயம் மற்றும் தொழில்துறை மேம்பாடு ஆகும்.



UNIT - V

# 16 தமிழக பொருளாதார ஆய்வு அறிக்கை (ம) தமிழக பட்ஜெட் 2025 – 2026

## தமிழக பொருளாதார ஆய்வு அறிக்கை 2025 - 2026

**முக்கிய அம்சங்கள்:**

- ✶ 2023இல் உலகப் பொருளாதாரம் 3.33%உண்மை வளர்ச்சி நிலையை அடைந்தது. இந்தியப் பொருளாதாரம் 2022 - 23 இல் 7.61%, 7.61%, 2023 - 24இல் 9.19%, 2024 - 25இல் 6.48%, வளர்ச்சியை எட்டியது.
- ✶ ஒருங்கிணைந்த கொள்கை முடிவுகளின் வலுவான அடித்தளத்தோடு, தமிழ்நாடு குறிப்பிடத்தக்க அளவில் பொருளாதார வளர்ச்சியில் மீண்டெழுந்துள்ளது; 2021-22 இலிருந்தே 8% அல்லது அதற்கு மேலான வளர்ச்சி விகிதத்தைத் தொடர்ந்து எட்டி வருகிறது.
- ✶ இந்தியாவின் நிலப்பரப்பில் 4%, நாட்டின் மக்கள்தொகையில் 6% மட்டுமே கொண்டிருக்கும் தமிழ்நாடு, 2023-24 ஆம் ஆண்டில் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 9.21% பங்களித்துள்ளது.
- ✶ 2023 -24இல் மாநில உள்நாட்டு உற்பத்தியானது (ஜிஎஸ்டிபி) நடப்பு விலையில் ரூ.27.22 லட்சம் கோடியை எட்டியுள்ளது; பெயரளவு வளர்ச்சி விகிதம் 13.71% ஆகவும், உண்மையான வளர்ச்சி விகிதம் 8.33% ஆகவும் உள்ளது.
- ✶ மோட்டார் வாகனங்கள், வாகன உதிரிபாகங்கள், ஜவுளி, தோல்பொருள்கள் ஆகியவற்றின் முக்கிய ஏற்றுமதியாளராக விளங்குவதால், மாநிலப் பொருளாதாரமானது உலகளாவிய சந்தை நிலைகளையொட்டியே அமைந்துள்ளது.தமிழ்நாட்டின் தனிநபர் வருமான வளர்ச்சியானது தொடர்ந்து பல ஆண்டுகளாகத் தேசிய சராசரியை விடவும் அதிகமாகவே இருந்து வருகிறது.
- ✶ 2022-23 இல் ரூ.2.78 லட்சமாக இருந்தது; இது தேசிய சராசரியான ரூ.1.69 லட்சத்தைக் காட்டிலும் 1.64 மடங்கு அதிகமானதாகும். இதன் காரணமாக, தனிநபர் வருமானத்தில் தமிழ்நாடு நான்காம் இடம் வகிக்கிறது.
- ✶ மாநிலத்தின் தனி நபர் வருமானம் குறிப்பிடத்தக்க அளவில் தேசிய சராசரியை விட மேலே உள்ளது.
- ✶ பெருநகரமொன்றை மட்டும் மையமாகக் கொண்டு இயங்கும் மகாராஷ்டிரம், கர்நாடகம், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களைப் போலன்றி, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது மாநிலம் முழுவதுமுள்ள நகர்ப்புற மையங்களில் பரவலாக்கப்பட்டுள்ளது.
- ✶ கோயம்புத்தூர், மதுரை, திருப்பூர், திருச்சிராப்பள்ளி, சேலம் போன்ற நகரங்கள் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை வழங்குவதோடு நகர்ப்புர-ஊரக இடைவெளிகளைக் குறைக்கவும் உதவுகின்றன.
- ✶ 2023-24இல், சேவைத் துறை (மூன்றாம் நிலை) யானது மாநிலத்தின் மொத்த மாநில உற்பத்தி மதிப்புக்கூட்டலில் (ஜிஎஸ்விஏ) 53.63%, பங்களித்தது; அதற்கடுத்து இரண்டாம் நிலைத் துறை (33.37%), முதன்மைத் துறை (13%) பங்களித்துள்ளன.
- ✶ வளர்ந்த பொருளாதாரங்களைப் போலவே, மாநிலத்தின் இரண்டாம் நிலைத் துறையின் பங்கு 5% அளவில் அதிகரித்தால், வேலைவாய்ப்புகள் மேலும் அதிகரிக்கும்.
- ✶ தமிழ்நாடு, 2030க்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை எட்டுவதை இலக்காகக் கொண்டுள்ளது.
- ✶ தற்போதைய ஆற்றலுடன், காலநிலை மாற்றம், மக்கள்தொகை மாற்றங்கள், தொழில்நுட்பச் சீர்குலைவு, மாறிவரும் வேலைவாய்ப்புச் சூழல்கள் போன்ற சவால்களை வியூகம் சார்ந்த திட்டமிடல் வாயிலாக வெற்றிகரமாக எதிர்கொண்டு தமிழ்நாடு இந்த இலக்கை எட்டும்.
- ✶ மின்னணுவியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் (ஐடிஇஎஸ்), தளவாடங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் போன்ற துறைகளை விரிவுபடுத்துவதற்கான வணிகச் சூழலை உருவாக்கி, குறைகடத்தி (செமிகண்டக்டர்) மற்றும் மேம்பட்ட மின்னணுவியல் துறைக்கான கொள்கைகளுடன் தமிழ்நாடு ஏற்கனவே இந்த வளர்ச்சிப் பாதையில் பயணிக்கத் தொடங்கியுள்ளது நம்பிக்கை அளிக்கிறது.

UNIT - V

# 17 தமிழகத்தில் பேரிடர் மேலாண்மை

**பேரிடர்** (Disaster)

- **உயிர்களுக்கும் உடைமைகளுக்கும்** இயற்கையினால் ஏற்படும் பாதிப்புதான் பேரிடர் எனப்படுகிறது.
- இயற்கையாக மட்டுமல்லாமல் தொழில்நுட்பம் மற்றும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களில் செயல்பாடுகளினால் **இயற்கை சூழல்களில், செயற்கையாக** மாற்றங்கள் ஏற்படுகின்றன.
- இத்தகைய **விரும்பத்தகாத மாற்றங்களால்** புவி முழுவதும் பேரழிவுகள் அதிகம் ஏற்படுகின்றன.
- பேரிடர் என்ற வார்த்தையின் மூலம் **கிரேக்க இலத்தீன்** மொழியில் **கெட்ட நட்சத்திரம்** என ஜோதிடக் கருத்திலிருந்து வருகிறது.

**பேரிடர் மேலாண்மை** (Disaster Management)

- பேரிடர்களின் தன்மைகளை அறிந்து அவற்றால் ஏற்படும் தீமைகளிலிருந்து விடுபட உதவும் **உத்திகளைச் செயல்படுத்துவதே** பேரிடர் மேலாண்மை எனப்படும்.

**மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்** (State Disaster Management Commission)

- **மத்திய அரசின் பேரிடர் மேலாண்மை சட்டம் 2005** இயற்றப்படுவதற்கு முன்பே தமிழ்நாடு அரசால் 08.03.2003 அன்று அரசாணை வெளியிடப்பட்டு பேரிடர் நிகழ்வின் போது தணிப்பு மற்றும் ஆயத்த நிலை ஏற்பாடு போன்ற பணிகளை ஒருங்கிணைந்த வகையில் செயல்படுத்த தலைமை செயலாளர் அவர்களை தலைவராக கொண்டு **மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்** அமைக்கப்பட்டது.
- **மாநில, மாவட்ட மற்றும் ஊரக அளவில் பேரிடர் மேலாண்மை பணிகளை திறம்பட மேற்கொள்ள** வரையறுக்கப்பட்ட அமைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு வழிமுறைகள் குறித்து **பேரிடர் மேலாண்மை சட்டம் - 2005 ல் மத்திய அரசு கொண்டுவந்தது.** இந்த சட்டத்தின் **பிரிவு 14(2) ன்** படி மாநில அளவில், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம், **மாண்புமிகு முதலமைச்சர் தலைமையின் கீழ்** ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**ஐக்கிய நாடுகள் சபையின் அபாய நேர்வு குறைப்பு அமைப்பு**

- **ஐக்கிய நாடுகள் சபையின் அபாய நேர்வு குறைப்பு அமைப்பின் (UNDRR),கூற்றுப்படி அபாய குறைப்பு (Disaster Risk Reduction)என்பது பேரிடருக்கான காரணங்களை முறையாக கண்டறிந்து பேரிடரின்போது அதன் தாக்கங்களைக் குறைப்பதாகும்.**
- இது இடர் உண்டாகும் இடங்களைத் தவிர்த்தல், மக்களின் உயிர் மற்றும் உடைமைகளின் பாதிப்பினைக் குறைப்பது, நில மேலாண்மை, சூழ்நிலை மேலாண்மை, எதிர் விளைவுகள் குறித்தத் தயார்நிலை மற்றும் எச்சரிக்கை ஆகியவற்றை உள்ளடக்கியது.

**அரசியல் பிரிவுகள் :**

- ✶ தமிழ்நாடு உருவான காலகட்டத்தில் **13** மாவட்டங்கள் மட்டுமே இருந்தன.
- ✶ அதன்பிறகு **நிர்வாக வசதிக்காக** மாநிலம் பல முறை மறுசீரமைப்பு செய்யப்பட்டது.
- ✶ தமிழ்நாட்டில் தற்போது புதியதாக உருவாக்கப்பட்டுள்ள மாவட்டங்களான கள்ளக்குறிச்சி, தென்காசி மற்றும் செங்கல்பட்டு, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, மயிலாடுதுறை ஆகியவற்றுடன் **38 மாவட்டங்கள்** உள்ளன.
- ✶ பின்வரும் அட்டவணையில் மாநில நிர்வாக பிரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன.

| நிர்வாக பிரிவுகள் | எண்ணிக்கை |
|---|---|
| மாவட்டங்கள் | 38 (32 + 6) |
| வருவாய் கோட்டங்கள் | 94 |
| பிர்காக்கள் | 1,207 |
| வருவாய் கிராமங்கள் | 17,653 |
| மாநகராட்சிகள் | 27 |
| நகராட்சிகள் | 148 |
| ஊராட்சி ஒன்றியங்கள் | 385 |
| பேரூராட்சிகள் | 488 |
| கிராம ஊராட்சிகள் | 12,620 |
| மக்களவைத் தொகுதிகள் | 39 |
| சட்டமன்றத் தொகுதிகள் | 234 |
| வட்டங்கள் | 316 |

- ✶ **சென்னை, நீலகிரி** மற்றும் **கன்னியாகுமரி** மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்கள் பல்வேறு காலகட்டங்களில் பிரித்தமைக்கப்பட்டன.

**இயற்கை அமைப்பு :**

- ✶ தீபகற்ப பீடபூமி எனப்படும் தக்காண பீடபூமியில் தமிழ்நாடு அமைந்துள்ளது.
- ✶ இப்பகுதி **கிரெட்டேசியஸ் காலத்தில் 135 மில்லியன்** ஆண்டுகளுக்கு முன்பு பிரிந்து சென்ற கோண்டுவானா நிலப்பகுதியிலிருந்து உருவான ஒரு பகுதியாகும்.
- ✶ இது உயரமான அரிக்கப்பட்ட குன்றுகள், ஆழமற்ற பள்ளத்தாக்குகள் மற்றும் சமவெளிகள் போன்ற தனித்துவமிக்க பல நிலத்தோற்றங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.
- ✶ தமிழ்நாட்டின் நிலத்தோற்ற அமைப்பு **கிழக்கு நோக்கிய சரிவைக்** கொண்டுள்ளது. தமிழ்நாடானது நிலத்தோற்றத்தின் அடிப்படையில்.
  1. மேற்கு தொடர்ச்சி மலை
  2. கிழக்கு தொடர்ச்சி மலை
  3. பீடபூமிகள்
  4. கடற்கரைச் சமவெளிகள்
  5. உள்நாட்டு சமவெளிகள்

  என **ஐந்து பெரும்** பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது.

| பயிர்கள் | தமிழகத்தில் பயிர் விளையும் மாவட்டங்கள் |
|---|---|
| **நெல்** | கடலூர் மற்றும் திருநெல்வேலி<br>தஞ்சாவூர், திருவாரூர், திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், |
| **சோளம்** | கோயம்புத்தூர் பீடபூமியிலும்,கம்பம் பள்ளத்தாக்கிலும் |
| **கேழ்வரகு** | கோயம்புத்தூர், தர்மபுரி, வேலூர் மற்றும் கடலூர் |
| **கம்பு** | சேலம்,இராமநாதபுரம்,திருநெல்வேலி,கரூர்,பெரம்பலூர் |
| **பருப்பு** | சென்னை, நீலகிரி, மற்றும் கன்னியாகுமரி(கிருஷ்ணகிரி) |
| **கொண்டைக்கடலை** | கோயம்புத்தூர் மாவட்டம் |
| **துவரம் பருப்பு** | வேலூர் மற்றும் கன்னியாகுமரி |
| **பச்சைப் பயறு**<br>**உளுந்து** | திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி |
| **கொள்ளுப்பயிர்** | தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி |
| **நிலக்கடலை,** | வேலூர், திருவண்ணாமலை<br>விழுப்புரம்,சேலம் மற்றும் புதுக்கோட்டை |
| **தென்னை மரங்கள்** | தர்மபுரி,கடலூர், பெரம்பலூர், மதுரை, ஈரோடு,<br>இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் |
| **தென்னை** | கோவை, தஞ்சாவூர் மற்றும் கன்னியாகுமரி |
| **கரும்பு** | திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர்,கடலூர்,திருநெல்வேலி,<br>கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு |
| **பருத்தி** | கோயம்புத்தூர் பீடபூமி,வைகை மற்றும் வைப்பாறு<br>மதுரை, இராமநாதபுரம்,விருதுநகர், திருநெல்வேலி,<br>தூத்துக்குடி,சேலம் மற்றும் தர்மபுரி |
| **முந்திரி** | கடலூர் |
| **இரப்பர்** | கன்னியாகுமரியில் மேற்கு தொடர்ச்சி மலை மற்றும்<br>கிழக்கு தொடர்ச்சி மலைகளின் சரிவுகள் |
| **தேயிலை** | நீலகிரி மலைகள் மற்றும் கோயம்புத்தூர் |
| **காபி** | நீலகிரி மலைகள் மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள<br>ஏற்காடு, திண்டுக்கல், மதுரை மற்றும் தேனி<br>மலைச் சரிவுகளில் |
| **மாங்காய்** | கிருஷ்ணகிரி |
| **திராட்சை** | தேனி |
| **பூ, காய், கனிகள்** | தருமபுரி |
| **கோழிப்பண்ணை** | நாமக்கல், சேலம், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் |

- வேளாண்மைக்கென ஒரு தனித்துறை **இந்திய பஞ்ச ஆணையத்தின்** பரிந்துரையின் பேரில் 1882 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

UNIT - V

# 21 மானுடப்புவியியல் – தமிழ்நாட்டில் தொழில்வளம்

**தமிழ்நாட்டின் வளங்கள்:**

- ✶ இயற்கையாகவே மனிதப் பயன்பாட்டிற்கு **புவியில் கிடைக்கும் பொருட்கள்** வளங்கள் எனப்படும்.
- ✶ வளங்கள் இரு வகைப்படும் - புதுப்பிக்க இயலும் வளங்கள், புதுப்பிக்க இயலாத வளங்கள்

| புதுப்பிக்க இயலும் வளங்கள் | புதுப்பிக்க இயலாத வளங்கள் |
|---|---|
| மீண்டும் மீண்டும் உருவாகக்கூடிய அல்லது உற்பத்தி செய்யக்கூடிய **முழுமையாக அழிக்க இயலாத** வளங்கள்.<br><br>**எ.கா:** சூரிய ஆற்றல், காற்று ஆற்றல், நீர் ஆற்றல். | பல்வேறு நீண்ட புவி அமைப்பியல் கால கட்டங்களில் **இயற்கையாகவே அழிந்து**, **அழுத்தப்பட்டு வளங்களாக** மாற்றப்பட்ட இயற்கைக் கூறுகள்.<br>**எ.கா:** பெட்ரோலியம், நிலக்கரி, எண்ணெய், கனிமம் |

**கனிமவளங்கள்**

- ✶ **தமிழ் நாட்டில்** பரவிக் காணப்படும் **முக்கிய கனிம வளங்கள் -** உப்பு மற்றும் பென்சில் **கிராபைட்**
- ✶ கனிமங்களை **மூன்று** வகைகளாகப் பிரிக்கலாம்.
  - உலோகக் கனிமங்கள் - அலோகக் கனிமங்கள் - கனிம எரிபொருட்கள்

| தமிழ்நாட்டிலுள்ள உலோகக் கனிமங்கள் | |
|---|---|
| இரும்புத்தாது | சேலம், நாமக்கல், திருவண்ணாமலை |
| செம்பு | சேலம், நீலகிரி, கோயம்புத்தூர், மதுரை |
| பாக்ஸைட் | சேலம், நீலகிரி, கோயம்புத்தூர், வேலூர், மதுரை, தருமபுரி, விழுப்புரம் |
| குரோமைட் | சேலம், நாமக்கல், திருச்சிராப்பள்ளி, மற்றும் ஈரோடு |
| பைரைட் | விழுப்புரம் |

| தமிழ்நாட்டிலுள்ள அலோகக் கனிமங்கள் | |
|---|---|
| சுண்ணாம்புக்கல் | விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம், சேலம் |
| மைக்கா | திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், இராமநாதபுரம் |
| மாக்னசைட் | சேலம், நாமக்கல், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு |
| ஸ்டீயடைட் | வேலூர், கடலூர், கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி |
| உப்பு | சென்னை, தூத்துக்குடி, கடலூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் |

UNIT - V

# 23 பொது விநியோக முறை

**பொதுவிநியோக முறை :**

- ✶ இந்தியாவில் பொதுவிநியோக முறை என்பது நியாய விலைக் கடைகள் மூலம் ஏழை மக்களுக்கு உணவு தானியங்களை வழங்கும் முறையாகும்.
- ✶ இது மத்திய நுகர்வோர் விவகாரங்கள் உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தால் நிர்வாகம் செய்யப்படுகிறது.
- ✶ சுமார் 5 இலட்சம் நியாய விலைக்கடைகள் மூலம் நுகர்வோருக்கு தானியங்களை விநியோகிக்கும் பொறுப்பு மாநில அரசுகளுக்கு உண்டு. கோதுமை, அரிசி, மண்ணெண்ணெய் ஆகியவை பொதுவாக வழங்கப்படும். பொது விநியோக முறையின் வரலாற்று பின்னணி:
- ✶ 1965 ஆம் ஆண்டு இந்திய உணவு கழகம் மற்றும் இந்திய வேளாண் விலை நிர்ணய ஆணையம் அமைக்கப்பட்ட போது பொது விநியோக முறையின் அமைப்பு துவங்கப்பட்டது.
- ✶ 1997ம் ஆண்டு பின் தங்கிய மக்களை மையமாக கொண்டு இலக்கு சார்ந்த புதுவிநியோக முறை என்ற திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- ✶ 2013 ம் ஆண்டு தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டு அதன் மூலம் பின்தங்கிய குடும்பங்களுக்கு உணவு தானியங்கள் வழங்கப்பட்டன.

TAF IAS ACADEMY

**பொது விநியோக முறையின் முக்கியத்துவம்:**

- ✶ வளர்ந்து வரும் பொருளாதாரங்களுக்கு பொது விநியோகத் திட்டம் மிகப்பெரிய நன்மைகளை கொண்டுள்ளது.
- ✶ பங்களாதேஷ், கம்போடியா மற்றும் பாகிஸ்தானில், பொது விநியோகத் திட்டங்கள் அதிக பெண் குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பதற்கு உதவியுள்ளன.
- ✶ இது நாட்டின் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பிற்கு பங்களிக்கிறது.
- ✶ இது உணவு விலைகளை நிலைப்படுத்துவதற்கும், பின்தங்கியவர்களுக்கு மலிவு விலையில் உணவை வழங்குவதற்கும் உதவியுள்ளது.
- ✶ விவசாய உணவு உற்பத்தி குறைவாக இருந்தாலும் கூட உணவு விநியோகம் தொடர்ந்து செல்லும் வகையில், கிடங்கில் உணவு தானியங்களின் இடையக இருப்பை இது வைத்திருக்கிறது.
- ✶ நாட்டின் உபரி பகுதிகளிலிருந்து தேவைப்படும் பகுதிகளுக்கு உணவை வழங்குவதன் மூலம் தானிய மறுபகிர்வுக்கு இது உதவியுள்ளது.
- ✶ குறைந்தபட்ச ஆதரவு விலை மற்றும் கொள்முதல் முறையின் விளைவாக உணவு தானிய உற்பத்தி அதிகரித்துள்ளது.

**இந்தியாவில் பொது விநியோக முறையுடன் தொடர்புடைய சிக்கல்கள் :**

**உணவு தானிய கசிவு:**

- ✶ ரேஷன் கடைகளுக்கு கொண்டு செல்லப்படும் போதும் ரேஷன் கடைகளிலிருந்து திறந்த சந்தைக்கு கொண்டு செல்லப்படும் போதும் TPDS குறிப்பிடத்தக்க அளவு உணவு தானிய கசிவை சந்திக்கிறது. முந்தைய திட்டக்க கமிஷன் TPDSதணிக்கையின் போது தேசிய அளவில் பொது விநியோக அரிசி மற்றும் கோதுமையில் 36 சதவீத கசிவைக் கண்டறிந்தது.

UNIT - V

# 24 தமிழக அரசுத் துறைகளின் திட்டங்கள்

## தமிழ்நாடு அரசின் திட்டங்கள் குழந்தை நலம் சார்ந்த திட்டங்கள் :

### I. தொட்டில் குழந்தைத் திட்டம் :

- ✶ 1992 ஆம் ஆண்டில் சேலத்தில் துவங்கி வைக்கப்பட்டது.
- ✶ பெண் சிசுக்கொலை வழக்கத்தை தடுக்கும் நோக்கில் நாட்டிலேயே முதல் முறையாக தமிழ்நாடு அரசால் துவங்கி வைக்கப்பட்டது.
- ✶ பதிவு பெற்ற தனியார் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் தத்து நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டு, அக்குழந்தைகள் பாதுகாக்கப்படுவது உறுதி செய்யப்பட்டது.

### II. முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம் :

- ✶ திட்டம் 1992 ஆம் ஆண்டு துவங்கி வைக்கப்பட்டது.

**நோக்கம் :**

- ✶ 2 பெண் குழந்தைகள் பிறந்தவுடன் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள பெற்றோர்களை ஊக்குவித்தல்.
- ✶ இத்திட்டமானது சிறு குடும்ப நெறியை ஊக்குவிக்கவும் பாலின வேறுபாட்டைகளைவும், ஏழைக் குடும்பங்களில் பிறந்த பெண் குழந்தைகளுக்கு பயன் அளிக்கும் விதமாக இத்திட்டம் செல்படுத்தப்பட்டது.
- ✶ பெண் குழந்தைகளின் உரிமைகளை பாதுகாத்தல்.
- ✶ பெண் குழந்தைகளுக்கு சமூக மற்றும் பொருளாதார அதிகாரத்தினை வழங்குதல்.
- ✶ பெண் குழந்தைகளின் நிலையை மேம்படுத்த குடும்பத்தின் பங்கினை உறுதி செய்தல்.
- ✶ பெண் குழந்தைகளை குறைந்தபட்சம் 10 ஆம் வகுப்பு வரை பயில ஊக்குவித்தல்.

### III. மகளிர் நலம் :

**மகளிர் நல திட்டங்கள் :**

- ✶ மத்திய சமூக நல வாரியம், மாநில சமூக நல வாரியம்.
- ✶ பெண்கள் குழந்தைகள், ஆதி திராவிடர், பழங்குடி மக்கள் போன்றோருக்கு திட்டங்களை செயல்படுத்த, 1952ஆம் ஆண்டு மத்திய சமூக நல வாரியமும், 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் மாநில அரசு மாநில சமூக நல வாரியமும் ஏற்படுத்தப்பட்டது.

## திருமண நிதியுதவி திட்டங்கள் :

### IV. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டம் :

- ✶ ஏழை பெண்களின் கல்வி நிலையை உயர்த்தவும், ஏழைப் பெற்றோர்கள் தங்கள் பெண்களின் திருமணத்தை நடத்தவும் உதவித்தொகை வழங்கும் திட்டம்
- ✶ 10 வகுப்பு வரை படித்த பெண்களுகபு 25000 ரூபாயுடன்,தாலிக்கு தங்கம் திட்டத்தின் கீழ் 8 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது.
- ✶ பட்டப்படிப்பு மற்றும் அதற்கு மேலான பட்டம் பெற்ற பெண்களுக்கு 50000 ரூபாயுடன் தாலிக்கு தங்கம் திட்டத்தின் கீழ் 8 கிராம் தங்கமும் வழங்கப்படுகிறது.

UNIT - V

# 25 தமிழகத்தின் சிறப்புகள்

| | | | |
|---|---|---|---|
| உலகின் 2-வது நீளமான கடற்கரை | **மெரீனா 13 கி.மீ** | மிகச்சிறிய மாவட்டம் | **சென்னை(174 ச.கி.மீ)** |
| உயர்ந்த சிகரம் | **தொட்டபெட்டா 2637 மீ** | மிகப்பெரிய பாலம் | **பாம்பன் பாலம்** |
| நீளமான ஆறு | **காவிரி (760 கி.மீ)** | அதிக எழுத்தறிவு | **கன்னியாகுமரி** |
| நுழைவாயில் | **தூத்துக்குடி** | அதிக மக்கள் நெருக்கம் | **சென்னை** |
| மான்செஸ்டர் | **கோயம்புத்தூர்** | குறைந்த மக்கள் நெருக்கம் | **நீலகிரி** |
| மலை வாசஸ் தலங்களின் ராணி | **உதகமண்டலம்** | குறைந்த மக்கள் தொகை | **பெரம்பலூர்** |
| அதிக மக்கள் தொகை | **சென்னை** | உயரமான கொடி மரம் | **செயிண்ட் ஜார்ஜ் கோட்டை (150 அடி)** |
| ஆசியாவில் பெரிய தொலைநோக்கி | **காவனூர் வைணுபாப்பு** | உயரமான கோபுரம் | **ஸ்ரீவில்லிபுத்தூர்** |
| மிகப்பெரிய கோயில் | **தஞ்சை கோயில்** | மிகப்பெரிய தேர் | **திருவாரூர் தேர்** |
| மிகப் பெரிய அணை | **மேட்டூர் அணை (1934)** | கோயில் நகரம் | **மதுரை** |
| பழமையான அணை | **கல்லணை** | நெற்களஞ்சியம் | **தஞ்சாவூர்** |
| மலைகளின் இளவரசி | **வால்பாறை** | தென்னாட்டு கங்கை | **காவிரி** |

## தமிழ்நாட்டின் முதன்மைகள்

- முதல் குடியரசுத்தலைவர் - டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்
- முதல் துணைக்குடியரசுத் தலைவர் - டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்
- முதல் பெண் நீதிபதி - பத்மினி ஜேசுதுரை
- முதல் பெண் மருத்துவர் - டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி
- முதல் பெண் ஆளுநர் - பாத்திமா பீவி
- முதல் பெண் முதலமைச்சர் - ஜானகி ராமச்சந்திரன்
- முதல் பெண் தலைமைச் செயலாளர் - லட்சுமி பிரனேஷ்
- முதல் பெண் கமாண்டோ - காளியம்மாள்
- முதல் நாளிதழ் - மதராஸ் மெயில் (1873)
- முதல் தமிழ்நாளிதழ் - சுதேசமித்திரன் (1891)
- முதல் வானொலி நிலையம் - சென்னை (1930)
- முதல் இருப்புப்பாதை - ராயபுரம் - வாலஜா (1856)
- முதல் வணிக வங்கி - மதராஸ் வங்கி (1831)
- முதல் மாநகராட்சி - சென்னை (29-9-1688)
- தமிழகத்தின் முதல் முதலமைச்சர் - அ. சுப்புராயலு ரெட்டியார்

TAF IAS ACADEMY

# 26 தமிழகத்தின் சமீபத்திய சாதனைகள்

## ஜனவரி - 2024

**திருச்சியில் நடைபெற்ற விழாவில் தமிழகத்துக்கு ரூ.20,140 கோடி மதிப்பிலான புதிய திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டியும் தொடங்கியும் வைத்தார்.**

- ✶ திருச்சி பன்னாட்டு விமான நிலையத்தில் புதிய முனையம் திறப்பு விழாவில் பங்கேற்ற பிரதமர் நரேந்திர மோடி மத்திய அரசின் நெடுஞ்சாலைத் துறை, உயர் கல்வித் துறை, ரயில்வே துறை, விமானப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து, எரிசக்தி துறை, அணுசக்தி துறை ஆகியவற்றின் சார்பில் ரூ.16,000 கோடி மதிப்பிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், ரூ.4,100 கோடி மதிப்பிலான திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்தும் வைத்தார்.
- ✶ ரூ.9,000 கோடிக்கும் அதிக மதிப்பிலான பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் திட்டங்களையும் பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்து வைத்தார்.
- ✶ கல்பாக்கத்தில் உள்ள இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தில், விரைவு எரிபொருள் மறுசுழற்சி உலையையும் பிரதமர் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- ✶ ரூ.400 கோடி செலவில் உருவாக்கப்பட்ட இந்த உலையானது தனித்துவமாக வடிவமைப்பைக் கொண்டுள்ளது. இது உலகிலேயே ஒரே வகையான மற்றும் வேகமான உலைகளிலிருந்து வெளியேற்றப்படும்கார்பைடு மற்றும் ஆக்சைடு எரிபொருள்களை மறுசுழற்சி செய்யும் திறன் கொண்டது.
- ✶ முற்றிலும் இந்திய விஞ்ஞானிகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- ✶ வரும் 2025 - ஆம் ஆண்டுக்குள், நாட்டின் 121 விமான நிலையங்கள் பசுமையானதாக மாற்றப்படும் என மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.
- ✶ திருச்சி விமான நிலையம் நிகழாண்டு பசுமையானதாக மாற்றப்பட்டுள்ளது.

**தென்னை நார்களை மதிப்புக்கூட்ட அதிநவீன ஆய்வகம் நிறுவப்படும் என்று தென்னை நார் தொழிலுக்கான தனித்த கொள்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

- ✶ இந்தக் கொள்கையை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.
- ✶ தென்னை நார் தொழிலில் மதிப்புக் கூட்டப்பட்ட நடைமுறைகளை மேம்படுத்துவதற்கு தென்னை நார் கொள்கை முன்னுரிமை அளிக்கிறது.
- ✶ தென்னை நார் துகள் மற்றும் தென்னை நார் சார்ந்த மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்களுக்காக பிரத்யேகமான சிறப்பு மையங்களை உருவாக்குவது தென்னை நார் கொள்கையின் நோக்கமாகும்.
- ✶ உள்ளூர், சர்வதேச சந்தை வாய்ப்புகளுக்காக தென்னை நார் சார்ந்த நிறுவனங்கள் வர்த்தகக் கண்காட்சிகளில் பங்கு பெறுவதை உறுதி செய்தல், சமச்சீர் தொழில் மயமாக்கல், சுற்றுச்சூழலுக்கு உகந்த ஏற்றுமதி வாய்ப்புகளை வலுப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளின் வாயிலாக தென்னை நார் பொருள்களின் சந்தையை விரிவாக்கம் செய்ய முடியும்.
- ✶ இதற்கு தென்னை நார் கொள்கை வழிவகுக்கிறது.

UNIT - V

# 28 தமிழக அரசுத் துறைகள் மற்றும் அதன் நலத்திட்டங்கள்

## 1. வருவாய்த்துறை

**வரலாற்றுப் பின்னணி :-**

**வருவாய் துறை நிர்வாகம் (மாவட்ட அளவில்)**

↓ மாவட்டாட்சியர்

↓ மாவட்ட வருவாய் அலுவலர்

↓ கோட்டாட்சி தலைவர்

↓ வட்டாட்சியர்

↓ வருவாய் ஆய்வாளர்

↓ கிராம நிர்வாக அலுவலர்

- ✶ வர்த்தகம் செய்வதற்காக இந்தியாவுக்கு வந்த பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்தியாவின் ஆட்சியாளர்களாயினர் வருவாயை எதிர்பார்த்து வந்த கம்பெனியார் **வருவாயைப் பெருக்கி உறுதி செய்வதற்காக 1781 -ம் ஆண்டு வருவாய் வாரியம் (Board of Revenue)ஒன்றை உருவாக்கினார்.**
- ✶ இதுதான் மாகாணத்தின் முதன்மை வருவாய் அதிகாரம் பெற்ற அமைப்பாக இருந்தது. வருவாயைப் பெருக்குவதே இந்த போர்டின் குறிக்கோளாகும்.
- ✶ இந்த அமைப்பு வருவாய் சம்பந்தமான **மேல் முறையீடுகளை விசாரித்து மேல் முறையீட்டு நீதிமன்றமாகவும் (Appellate Court) செயல்பட்டது.**
- ✶ **1786 ஆம் ஆண்டு வங்காளத்தில்தான் முதல் வருவாய் போர்டு ஆரம்பிக்கப்பட்டது.** அதைத் தொடர்ந்து சென்னை ராஜஸ்தானியில் இந்த போர்டு துவங்கப்பட்டது. இந்தியா விடுதலை பெற்ற பின்னரும் சென்னையில் இந்த போர்டு நீடித்தது.
- ✶ பின்னர் இந்த அமைப்புக்கு தமிழ்நாடு வருவாய் போர்டு என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது!
- ✶ இப்பெயர் மாற்றம் செய்யப்பட்ட போர்டும் 1980-ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது.
- ✶ இதன் பணியை தமிழ்நாடு வருவாய்த்துறை மேற்கொண்டது.

**குறிப்பு:**

- ✍ வருவாய் துறையுடன் பேரிடர் மேலாண்மை துறை சேர்க்கப்பட்ட ஆண்டு - 2005.
- ✍ வருவாய்த் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை என பெயர்மாற்றம் செய்யப்பட்ட ஆண்டு - 19.05.2017.

**தமிழ்நாடு வருவாய்த்துறையின் பிரதானப் பணிகளாவன :-**

- ✶ பலதரப்பட்ட அரசுத் திட்டங்களைத் திறமையாகச் செயல்படுத்தல்;
- ✶ அரசு நிலங்களுக்குக் காப்பாளராக இருத்தல்;
- ✶ மாநிலத்தின் நில ஆவணங்களை முறையாகப் பராமரித்தல்;
- ✶ நிலச்சீர்த்திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல்;
- ✶ தகுதியின் அடிப்படையில் தேவையுடையோர்க்கு நிலப் பட்டுவாடா செய்தல்;
- ✶ நிர்வாக விவகாரங்களில் அரசுக்கு ஆலோசனை கூறல்;
- ✶ பலதுறைகளின் பணிகளை ஒருங்கிணைத்தல்;
- ✶ மாநிலத்தின் வளர்ச்சிப்பணிகளை மேற்பார்வையிடல்;
- ✶ ஆட்சி மற்றும் நீதிப் பணிகளை நிறைவேற்றல்;
- ✶ இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணமளித்தல்.

## 2. பள்ளி கல்வித் துறை


**வரலாற்றுப் பின்னணி :-**

✶ **சென்னை ராஜதானி ஆளுநராயிருந்த சர் தாமஸ் மன்றோ (Sir Thomas Munro) முதன் முதலில் 1822-ஆம் ஆண்டு ஒரு ஆய்வை மேற்கொண்டார்.**

✶ மாவட்ட ஆட்சியர்களைக் கொண்டு திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஆய்வறிக்கையில் தமிழ்நாட்டில் நிலவிய கல்விநிலை பற்றிக் குறிப்பிடப்பட்டிருந்தவை:

1. பல மாவட்டங்களில் பள்ளிகள் செயல்பட்டுக்கொண்டிருந்தன ;
2. இப் பள்ளிகளில் உயர் சாதி வகுப்பார் மட்டுமே படித்து வந்தனர்;
3. தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற பிற்படுத்தப்பட்டோருக்கும் கல்வி மறுக்கப்பட்டது;
4. அரசாங்கத்துக்கும் கல்வி வளர்ச்சிக்கும் எவ்வித தொடர்பும் இல்லாமலிருந்தது;
5. சலுகை வகுப்புகளுக்கு அளிக்கப்பட்ட கல்வியும் ஒரே சீராக இல்லை;
6. 1,34,76,923 மக்கள்தொகை கொண்ட சென்னை ராஜதானியில் ஏறக்குறைய 12,000 பள்ளிகள் இருந்தன. தமிழ்நாட்டில் அறிவியல் ரீதியாக மேற்கொள்ளப்பட்ட முதல் கல்வி ஆய்வு இதுவேயாகும்.

TAF IAS ACADEMY




**கல்விக் குறிப்பு :-**

✶ சென்னை ராஜதானியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் தாமஸ் மன்றோ ஒருவரலாற்றுச் சிறப்புடைய குறிப்பைத் தயாரித்தார். (Minute of 10 March 1826) இக்குறிப்பில் மூன்று முக்கிய பரிந்துரைகள் செய்யப்பட்டிருந்தன:

1. ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் இரண்டு அரசாங்கப் பள்ளிகளைத் திறக்க வேண்டும்.
2. இதேபோன்று,ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒரு பள்ளி ஆரம்பிக்கப்பட வேண்டும். இப்பள்ளிகளின் வாயில்கள் அனைவருக்கும் திறக்கப்பட வேண்டும்.
3. இப்பள்ளிகளின் வளர்ச்சிக்காக அரசாங்கம் ஆண்டு தோறும் ரூ. 50,000 நிதி ஒதுக்க வேண்டும். இப்பரிந்துரைகளின் பேரில் **சென்னை ராஜதானியில் 1826ல் பொதுக் கல்வி போர்டு உருவாக்கப்பட்டது.** இதுவே கல்வித் துறையின் துவக்கமாகும்.

UNIT - V

# 29 தமிழக மாவட்டங்களின் சிறப்புகள்

- ✶ தமிழகத்தில் தற்போது 38 மாவட்டங்கள் உள்ளன.அவை புவியியலின் அடிப்படையில் நான்கு மண்டலங்களாகப் பிரித்துக் காணலாம்.
  - **வடக்கு மண்டல மாவட்டங்கள்**
  - **தெற்கு மண்டல மாவட்டங்கள்**
  - **மத்திய மண்டல மாவட்டங்கள்**
  - **மேற்கு மண்டல மாவட்டங்கள்**

**வடக்கு மண்டல மாவட்டங்கள் :**

**1. சென்னை :**

- ✶ தமிழக மாவட்டங்களிலேயே மிகவும் வளர்ச்சியடைந்த மாவட்டம் இதுவே ஆகும்.
- ✶ சென்னை மாகாணம் 1969-ஆம் ஆண்டு தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இந்நகரின் பெயரான மதராஸ் என்பது 1996-ஆம் ஆண்டு **சென்னை** என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- ✶ கி.பி.1640-ல் ஆங்கிலேயரால் புனித ஜார்ஜ் கோட்டை கட்டப்பட்டது. இதுவே தற்போது தமிழகத்தின் தலைமை செயலமாக செயல்படுகிறது.
- ✶ உலகின் உள்ள 35 பெரிய மாநகரங்களுள் சென்னையும் ஒன்று.
- ✶ இந்தியாவின் முதல் நகராட்சி என்ற பெருமையைச் சென்னை பெற்றள்ளது.
- ✶ இது இந்தியாவில் மட்டுமின்றி இங்கிலாந்து அல்லாத காமன் வெல்த் நாடுகளின் மாநகராட்சியைக் காட்டிலும் பழமையானது.
- ✶ மேலும்,சென்னையானது தென்னிந்திய கலாச்சாரத்தின் நுழைவு வாயிலாகச் சிறப்பிக்கப்படுகிறது.
- ✶ சென்னை புறநகர் பேருந்து நிலையம் (கோயம்பேடு) ஆசியாவிலேயே மிகப்பெரிய பேருந்து நிலையம் ஆகும். மேலும் இங்கு மிகப்பெரிய **காய்கறி சந்தை** செயல்பட்டு வருகிறது.
- ✶ இந்தியாவின் இரண்டாவது நூலகம் அண்ணா நூற்றாண்டு நூலகம் யுனெஸ்கோ அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.மேலும், இது **தெற்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகம்** ஆகும்.
- ✶ கன்னிமாரா பொது நூலகம்
- ✶ சென்னையானது தென்னிந்தியாவின் கல்வித் தலைநகரமாகவும் விளங்கி வருகின்றது
- ✶ சென்னையில் உள்ள **மெரினா கடற்கரை உலகின் இரண்டாவது பெரிய கடற்கரை** ஆகும். மேலும், இதன் **நீளம் 13 கி.மீ.** ஆகும்.
- ✶ தமிழகம் மற்றும் பாண்டிச்சேரிக்கு பொதுவான மாநிலங்களின் உயர்நீதிமன்றம் **சென்னையில்** உள்ளது.
- ✶ **சேப்பாக்கம் கிரிக்கெட் அரங்கம்** இங்கு தான் முதன் முதலாக **இந்திய கிரிக்கெட் அணி டெஸ்ட் போட்டியை** வென்றது.
- ✶ **சென்னை விமான நிலையம்**, இந்தியாவில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் சரக்கு விமான நிலையமாகும்.
- ✶ **சென்னைத் துறைமுகம்** இந்தியாவில் முக்கிய துறைமுகங்களுள் ஒன்று.
- ✶ இந்தியாவின் வாகன உற்பத்தியில் **சென்னை முதலிடம்** வகிக்கிறது.
- ✶ தென்கிழக்காசிய **கண்ணாடி நூலிழை** மையங்களுள் ஒன்றான சென்னை இந்தியாவில் **தகவல் தொடர்பில்** முதலிடம் வகிக்கிறது.
- ✶ மேலும், இங்கு **பிர்லா கோளரங்கம்,வள்ளுவர் கோட்டம்** ஆகிய பகுதிகள் சென்னையின் முக்கிய இடங்களாகும்.

UNIT - V

# 31 அசல் வினாத்தாள் முதல் நிலை தேர்வு (PRELIMINARY)

1. ஒவ்வொரு மாவட்டத்திலும், பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தெர்வில் முதலிடம் பிடிக்கும் தமிழக இந்து ஆதி திராவிட மாணவர்களுக்கு (ஒரு ஆண் மற்றும் ஒரு பெண்) வழங்கப்படும் ரொக்க விருது---------ஆகும்.
   A) திருவள்ளுவர் விருது B) அம்பேத்கார் விருது
   C) அண்ணல் காந்தி நினைவு விருது D) பெரியாரி விருது
2. தமிழக அரசின் முதல் மனிதவள மேம்பாட்டு அறிக்கை வெளியிடப்பட்ட ஆண்டானது
   A) 2000 B) 2001 C) 2002 D) 2003
3. செங்கல்பட்டு மாவட்டத்தை "சென்னையின் நுழைவாயில்" என்று ஏன் அழைக்கலாம்?
   A) தென் மாவட்டங்களிலிருந்து தலைநகருக்கு செல்லும் நுழைவாயிலாக இருப்பதால்
   B) வட மாவட்டங்களிலிருந்து தலைநகருக்கு செல்லும் நுழைவாயிலாக இருப்பதால்
   C) கிழக்கு மாவட்டங்களிலிருந்து தலைநகருக்கு செல்லும் நுழைவாயிலாக இருப்பதால்
   D) மேற்கு மாவட்டங்களிலிருந்து தலைநகருக்கு செல்லும் நுழைவாயிலாக இருப்பதால்
4. பின்வரும் கூற்றை ஆராய்க.
   1. SAKHI- திட்டம் பெண்களுக்கானது
   2. பூர்ண சக்தி கேந்திரா பெண்களுக்கானது
   3. கிராம ஒருங்கிணைப்பு மற்றும் சேவைகளை எளிதாக்கும் திட்டம், பெண்களுக்கானது
   4. NAV-YUVAK (நவ்-யுவக்) திட்டம், பெண்களுக்கானது
   A) (1) மற்றும் (4) சரி B) (3) மற்றும் (4) சரி
   C) (2) மற்றும் (4) சரி D) (1), (2) மற்றும் (3) சரி
5. கூற்று (A): ஒரு நிலை நெருக்கடி மையம் வன்முறையால் பாதிக்கப்பட்ட 18 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கும் உதவுகிறது.
   காரணம் (R): 18 வயதுக்கு குறைவான பெண் குழந்தைகளுக்கு சிறார் நீதிச் சட்டம் மற்றும் போக்சோ சட்டம், 2012 மூலம் நிறுவப்பட்ட நிறுவனங்களும், அதிகாரிகளும் உதவுவர்.
   A) (A)மற்றும் (R) இரண்டுமே சரி மற்றும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கம்
   B) (A) தவறு (R) சரி
   C) (A) சரி (R) தவறு
   D) (A) மற்றும் (R) இரண்டுமே சரி மற்றும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கமல்ல
6. காலநிலை மாற்றம் குறித்த தமிழ் மாநில செயல் திட்டம் (TNSAPCC) பாதிக்கப்படக் கூடிய ஏழு துறைகளை கண்டறிந்துள்ளது. கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலிலிருந்து சரியான துறையை தெரிவு செய்க.
   1. நிலையான வேளாண்மை 2. நீர் வளங்கள்
   3. தொழிற்சாலை மாசுபடுத்துதல் 4. கடலோர பகுதி மேலாண்மை
   5. நிலையான வாழ்விடம் 6. அறிவு மேலாண்மை
   குறியீடுகளை பயன்படுத்தி சரியான விடை காண்க.
   A) 1, 2, 4, 5 மற்றும் 6 B) 2, 3, 4, 5 மற்றும் 6
   C) 1, 3, 4 ,5 மற்றும் 6 D) 1,2,3,4 மற்றும் 5
7. வளநாடு வனவிலங்கு சரணாலயம் எங்கு அமைந்துள்ளது?
   A) கோயம்புத்தூர் B) தூத்துக்குடி C) ஈரோடு D) ஊட்டி
8. 2011 மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் தேசிய சராசரி எழுத்தறிவு விகிதம்
   A) 74.4% B)74.02% C) 74.08% D) 74.10%